**தலைப்பு 207 – தொல்பொருளியல் திணைக்களம்**

-----------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

---------------------------

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---------------------------------------------

தொல்பொருளியல் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2022 மே 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2022 மே 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொல்பொருளியல் திணைக்களத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

-------------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3. நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக வெற்றிகரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4. நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நான் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| பந்திக்கான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் |
|---|---|---|
| 1.6.1 (ஆ) | திணைக்களத்தின் பிரதான அலுவலகம் அமைந்துள்ள சொத்தின் உரித்து கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கடந்த கணக்காய்வு அறிக்கைகள் ஊடாகவும் காண்பித்து கொடுக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு கையகப்படுத்தாது காணி ரூபா 911.5 மில்லியன் மற்றும் கட்டிடம் ரூபா 138 மில்லியன் என நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. | சொத்துக்களின் உரித்து திணைக்களத்திற்கு கையகப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைப்பாடுகள்

**(அ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2021 திசெம்பர் 31 இல் அரச உத்தியோகத்தர்களின் முற்பண "பீ" கணக்கின் தனி மீதிகள் வகைப்படுத்தல் பொழிப்பின் மீதி கூட்டுத்தொகை ரூபா 108,817,280 ஆக காணப்பட்ட போதிலும், கடன் கட்டுப்பாட்டு கணக்கின் மீதி ரூபா 109,243,852 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் அவ் ரூபா 426,572 ஆன வேறுபாடு அடையாளப்படுத்தப்பட்டு சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த ரூபா 426,572 ஆன வேறுபாடு அடையாளப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தனி மீதிகள் பதிவேடு மற்றும் கடன் கட்டுப்பாட்டு கணக்கு இடையே காணப்படுகின்ற இந்த வேறுபாடு அடையாளப்படுத்தப்பட்டு தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1. பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகளுக்கு உட்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2021 திசெம்பர் 31 இல் நிகழ்ச்சித்திட்டம் 01 இன் 1301 ஆம் இலக்க செலவின விடயத்திற்கு தொடர்புடையதான நிதியேற்பாடு சேமிப்பு ரூபா 2,263,948 ஆக காணப்பட்ட போதிலும், நிதிக் கூற்றுக்கள் பிரகாரம் மொத்த பொறுப்புக்கள் ரூபா 8,029,634 ஆகியமையினால் அச் செலவின விடயத்திற்கான நிதியேற்பாடு சேமிப்பு மிகைத்து ரூபா 5,765,686 ஆன பொறுப்புக்களுக்கு உட்படிட்டிருந்தது. | குறித்த அவதானிப்புடன் இணங்குகின்றேன். | நிதியேற்பாட்டு சேமிப்புக்களை மிகைத்து பொறுப்புக்களுக்கு உட்படல் கூடாது. |
| (ஆ) 2021 திசெம்பர் 31 இல் நீதிமன்றத்தில் 67 வழக்குகள் பரீட்சிக்கப்பட்டு வந்ததுடன், அவ் வழக்குகளில் பண்டாரவலை மற்றும் மாத்தறை மாவட்ட நீதிமன்றத்தில் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு எதிராக 02 வழங்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு அரச உத்தியோகத்தர்களை பிரதிவாதிகளாக்கி தாக்கல் செய்யப்பட்ட இரண்டு வழங்குகளில் காணப்பட்ட அசாத்தியமான பொறுப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 141,500,000 ஆகும். | அவதானிப்பிற்கு பதில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்க-வில்லை. | இந்த நீதிமன்றங்களில் பரீட்சிக்கப்படும் வழக்குகளில் திணைக்களத்தின் பணிப்பொறுப்புக்களை ஆராய்ந்து நிறைவேற்றப்பட வேண்டியதுடன், திணைக்களத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள் தொடர்பாகவும், அதற்கான பொறுப்புக்கள் தொடர்பாகவும் கூறிய கவனம் செலுத்தப்படல் வேண்டும் |

### 2.2. ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2012 தொடக்கம் 2022 வரையான காலப்பகுதியினுள் அமெரிக்க உதவி பங்களிப்பின் கீழ் செயற்படுத்தப்பட்டு வருகின்ற மதிப்பிடப்பட்ட மொத்த பெறுமதி ரூபா 323.8 மில்லியன் ஆன ரஜகலதென்ன தொல்பொருளியல் பாதுகாப்பு செயற்திட்டத்திற்கு மீளாய்வாண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் தேறிய நிதியேற்பாடு ரூபா 31,069,722 ஆக காணப்பட்ட போதிலும், 2021 ஆம் ஆண்டில் செயற்திட்டத்தின் பல்வேறு நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டமையின் காரணத்தினால் ஆண்டினுள் 02 அகழ்வு வேலைத்தளங்கள் மற்றும் 05 பாதுகாக்கப்பட்ட வேலைத்தளங்களின் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திருத்தப்பட்ட நிதியேற்பாட்டில் ரூபா 17,903,317 ஆன தொகை செலவிடப்பட்டு 58 சதவீத நிதிமுன்னேற்றம் | குறித்த அவதானிப்புடன் இணங்குகின்றேன். | 2022 ஆம் ஆண்டினுள் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ள இந்த ரஜகலதென்ன வேலைத் தளத்தினுள் 2021 ஆம் ஆண்டின் போதும் திட்டமிடப்பட்ட வண்ணம் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் நாட்டினுள் காணப்படுகின்ற நிலைமை தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு வெளிநாட்டு நிதி |

| | |
|---|---|
| மற்றும் 77 சதவீத செயன்முன்னேற்றம் அடையப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டம் 2022 ஆம் ஆண்டில் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டிருந்த போதிலும் தற்போது காணப்படுகின்ற நிதி மற்றும் பல்வேறு தடைகளினால் அப் பணிகள் அத் திகதியில் நிறைவு செய்வதற்கு முடியாத நிலை உருவாகியுள்ளது. | பெறுவனவுகள் பயனுறுதிமிக்க பணியொன்றில் ஈடுப்படுத்துவதற்கு மற்றும் பணி நிறைவு செய்வதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டும். |

**2.3. சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **பெறுமதி ரூபா** | **இணங்காமை** | | |
| **(அ)** | 2018 பெப்ரவரி 20 திகதிய 03/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 02 V ஆம் பிரிவு. | - | ஓய்வு பெற்றவர்கள் மீண்டும் கடமையில் ஈடுபடுத்தும் காலப்பகுதியினுள் பொருத்தமான பின்னவர் அடையாளப்படுத்தப்பட்டு பயிற்சி அளிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு பயிற்சியளிக்கப்படாது ஒப்பந்த அடிப்பிடையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர்கள் மீண்டும் மீண்டும் ஒப்பந்த அடிப்படையில் கடமையில் ஈடுப்படுத்தப்பட்டிருந்தனர். | தற்போதுள்ள உத்தியோகத்தர்கள் ஊடாக அந் நடவடிக்கைகள் நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | இந்த சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| **(ஆ)** | 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 1 ஆம் பகுதியின் 13.2 ஆம் பிரிவு | - | கோட்டை தொல்பொருளியல் நூதனசாலை வளாகத்தில் 02 மோட்டார் வாகனங்கள், திணைக்களத்தின் பிரதான அலுவலக வளாகத்தில் 02 மோட்டார் வாகனங்கள், 06 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் பிரதேச செயலகங்களின் 02 லொறிகள் கைதவிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளாது பழுதடைந்து நிறுத்தப்பட்டிருந்தது. | இந்த வாகனம் கைதவிர்ப்பு செய்வதற்கு மற்றும் ஏலமிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | இந்த சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.4 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பனவு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மரணித்தல், ஓய்வுப் பெறுதல் மற்றும் சேவையை விட்டுச் செல்லுதல் போன்ற காரணங்களினால் திணைக்களத்தில் தற்போது சேவையில் இல்லாத ஊழியர்களிடமிருந்து மற்றும் உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 4,413,293 ஆன கடன் மீதியில் 05 ஆண்டுகளை மிகைத்த கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,392,955 ஆகும். அந் நிலுவை கடன் மீதிகள் 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக கட்டுபாட்டு பிரிவின் ஊடாக எழுத்துமூல பதில் பெற்றுக் கொடுக்கப்படவில்லை. தற்போது அக் கடன் மீதி அறவிடப்படவில்லை. | இந்த கடன் மீதி அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.5. வைப்பு மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) புகைப்படங்கள் அறிக்கையிடும் பிரிவிற்கு தேவையான உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 2,415,342 ஆன தொகை குறித்த பணிகளுக்காக பயன்படுத்தாது 2021 திசெம்பர் 31 திகதியிலும் பொது வைப்பு கணக்கினுள் விளைவற்று காணப்பட்டது. | அவதானிப்புடன் இணங்குகின்றேன். | இந்த பொது வைப்பு கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தொகை குறித்த பணிக்காக பயன்படுத்தி பணியினை நிறைவு செய்வதல் வேண்டும். |
| (ஆ) நிதி பிரமாணம் 570 பிரகாரம் 02 ஆண்டுகளை மிகைத்த வைப்புக்கள் காலங்கடந்த வைப்புக்கள் என கருதி நிதி பிரமாணம் 571 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், 02 வைப்பு கணக்குகளுக்கு தொடர்புடையதாக கூட்டுத்தொகை ரூபா 48,068,751 ஆன காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது வைப்பு கணக்கினுள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | குறித்த அவதானிப்புடன் இணங்குகின்றேன். | இந்த வைப்பு தொடர்பாக நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.6. வங்கி கணக்குகளை செயற்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 திசெம்பர் 31 இல் கூட்டுத்தொகை ரூபா 947,555 ஆன திணைக்களத்திற்கு நேரடியாக செலவு வைக்கப்படுகின்ற வருமானம் அடையாளப்படுத்தப்பட்டு தீர்க்கப்படாது 06 மாதங்களை மிகைத்த இந்த பெறுவனவு மற்றும் அடையாளப்படுத்தாத பெறுனவு என குறிப்பிடப்பட்டு வங்கி இணக்க கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது. | குறித்த அவதானிப்பு சரியானதாகும். | வங்கி நடைமுறை கணக்கிற்கு நேரடியாக செலவு வைக்கப்படுகின்ற வருமானம் அடையாளப்படுத்தப்பட்டு தீர்க்கப்பட்டு வங்கி இணக்க கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) 2021 திசெம்பர் 31 இல் வைப்புச் செய்யப்பட்ட போதிலும் செலவு வைக்கப்படாத 02 ரசீதுகளின் கூட்டு பெறுமதி ரூபா 303,825 ஆகும். 06 மாதாங்களுக்கு அதிகமான காலம் தொடர்க்கம் தேறாத இந்த பெறுமதி அடையாளப்படுத்தப்பட்டு சீர்செய்யப்படாது 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கி இணக்க கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது. | குறித்த அவதானிப்பு சரியானதாகும். | வைப்பு செய்யப்பட்ட போதிலும் செலவு வைக்கப்படாத வைப்புக்கள் அடையாளப்படுத்தப்பட்டு சீர் செய்யப்பட்டு, வங்கி இணக்க கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1. பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) களனி விகாரையின் ஓவியங்களை பாதுகாப்பதற்காக அரச கூட்டுத்தாபனமொன்றிலிருந்து நன்கொடையாக பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த ரூபா 1,494,434 ஆன தொகை 2020 திசெம்பர் 11 ஆம் திகதி அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டில் வரிசை அமைச்சின் செயலாளரின் தலைமையில் நடத்தப்பட்ட கூட்டமொன்றில் பெற்றுக் கொடுக்கப்பட்ட ஆலோசனை பிரகாரம் அத் தொகை மீண்டும் பெற்றுக் கொள்ளப்பட்டு அந் நோக்கங்கள் மற்றும் பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றுவதற்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த | கூட்டத்தில் பெற்றுக் கொடுக்கப்பட்ட ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத் தொகை பயன்பாட்டிற்காக திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | பெற்றுக் கொடுக்கப்பட்ட ஆலோசனைகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| போதிலும், அவ் ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) களனி விகாரையின் ஓவியங்கள் பாதுகாப்பு தொல்பொருளியல் திணைக்களத்தின் இரசாயன பாதுகாப்பு பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. விகாரையில் காணப்படுகின்ற ஓவியங்கள் மற்றும் சிற்பங்கள் தற்போது பெருமளவு உரிந்து மற்றும் சிதைந்து அழிந்துக்கொண்டிருந்தன. இந்த ஓவியங்கள் மற்றும் சிற்பங்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 04 ஊழியர்கள் மட்டும் இணைக்கப்பட்டிருந்ததுடன், பல்வேறு காரணங்களினால் அவர்கள் தாமதமாக பணிகளை மேற்கொண்டமையினால் ஓவியங்கள் மற்றும் சிற்பங்கள் பாதுகாக்கப்படுகின்ற வேகத்தினை விட மிக வேகமாக அழிக்கப்பட்டு வருகின்றன. | முடிந்த வரையில் இந்த பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பதவியணி ஈடுப்படுத்தப்பட்டுள்ளது. காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் ஊடாக பெற்றுக் கொடுக்கப்பட்ட நிதியேற்பாடு மீண்டும் பெற்றுக் கொடுக்கப்படுமெனில் பாதுகாப்பு விரைவாக மேற்கொள்ளக் கூடும். | திணைக்களத்தின் நோக்கங்களில் பாதுகாப்பு முக்கியமான பணியாகும். களனி போன்று பொதுமக்களின் மரியாதைக்கு பாத்திரமாகும் இடம் பராமரிக்கப்பட்டு பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) திணைக்களத்தின் தொல்பொருட்கள் பாதுகாப்பு பிரிவு சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டினுள் தொல்பொருள் சட்டத்தினை மீறிய 232 சந்தர்ப்பங்களுக்கு தொடர்புடையதாக நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்குகளில் தொல்பொருட்கள் திருடப்பட்ட 03 சந்தர்ப்பங்கள், தொல்பொருட்கள் அழிக்கப்பட்ட 14 சந்தர்ப்பங்கள், அனுமதியற்ற அகழ்வுகள் தொடர்பான 199 வழக்குகள், அனுமதியற்ற கையகபபடுத்தல்கள் தொடர்பான 02 வழக்குகள் மற்றும் ஏனைய 14 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. ஆண்டினுள் 122 வழக்குகள் நிறைவு செய்யப்பட்டிருந்ததுடன், அதனூடாக தண்டப்பணம் ரூபா 38,865,000 அறவிப்பட்டிருந்தது. எனினும் 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளினுள் தொல்பொருட்கள் திருடல் மற்றும் அழித்தல் தொடர்பான நிகழ்வுகள் முறையே 273, 121 மற்றும் 383 அறிக்கையிடப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் இந்த நிகழ்வுகள் காலத்திற்கேற்ப அதிகரித்திருந்தது. | குறித்த அவதானிப்பு சரியானதாகும். | தொல்பொருட்கள் திருடல், சேதப்படுத்தல் மற்றும் அழித்தலை தவிர்ப்பதற்காக எடுக்கப்பட வேண்டிய பொருத்தமான நடவடிக்கை பின்பற்றப்பட வேண்டியதுடன், அது தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) அகழ்வு பிரிவின் ஊடாக தொல்பொருள் இட அகழ்வுகள் மற்றும் அகழ்வு அறிக்கைகள் தயாரித்தல் தொடர்பாக 12 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டினுள் கூட்டுத்தொகை ரூபா 5,191,499 ஆன நிதியேற்பாட்டின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்தது. ஆண்டு இறுதியில் 04 செயற்திட்டங்களின் பணிகள் நிறைவு செய்ப்பட்டிருந்ததுடன், அதன் ஒட்டுமொத்த நிதி மற்றும் பௌதீக செயன் முன்னேற்றம் முறையே 37 சதவீதம் மற்றும் 75 சதவீதமாகும். அதன் பிரகாரம் 06 செயற்திட்டங்களின் பணிகள் நிறைவு செய்வதற்கு முடியாதிருந்ததுடன், நிகழ்காலத்தில் காணப்படுகின்ற நிதி நெருக்கடியினால் காலவரையறை நடவடிக்கைகளுக்கு பரிந்துரைக்கப்பட வேண்டிய செயற்திட்டங்கள் தற்காலிகமாக நிறுத்துதல் இதற்காக காரமணாகியிருந்தது. | ஆண்டினுள் அகழ்வு மற்றும் அகழ்வு அறிக்கைகள் தயாரிக்கும் 12 செயற்திட்டங்கள் ரூபா 5,191,499 ஆன நிதியேற்பாட்டின் கீழ் செயற்படுத்தப்பட்டதுடன், ஆண்டு இறுதியில் 06 செயற்திட்டங்களின் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்தது. | நாட்டில் காணப்படுகின்ற நிலைமை செயலாற்றலுக்கு தடையாக இருப்பினும், 2020 ஆண்டிற்கு இணையாக 2021 ஆம் ஆண்டினுள் நாடு திறந்திருந்தமை மற்றும் பணிகள் நிறைவேற்றும் திறன் காணப்பட்டமையினால் செயன்முன்னேற்றம் அதிகரித்துக் கொள்வதற்கு கவனம் செலுத்தப்படல் வேண்டும். |
| (உ) திணைக்களத்தின் மேற்கு பிரதேச அலுவலகத்தின் ஊடாக மேல் மாகாணத்தினுள் காணப்படுகின்ற 65 இடங்கள் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு முன்மொழியப்பட்டிருந்தது. எனினும் நினைவு வர்த்தமானி பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டினுள் அப் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த இடம் வர்த்தமானி ஊடாக பிரசுரிப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் குறித்த பதிவேடுகள் சட்ட வரைவு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நினைவு வர்த்தமானி பிரசுரிக்கும் பணி குறித்து கவனம் செலுத்தப்படல் வேண்டும். |
| (ஊ) திணைக்களத்தின் மேல் மாகாண அலுவலகத்தின் கீழ் உள்ள பாஹியகல குகை அருகேயான பாதுகாப்பு மற்றும் அகழ்வு நடவடிக்கைகள் 2012 ஆம் ஆண்டின் பின்னர் 09 ஆண்டுகள் காலம் நிறுத்தப்பட்டிருந்தது. கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட வெளிகள பரிசோதனையின் பிரகாரம் 40 ஏக்கர் நில பகுதியை உடைய இந்த குகை அருகேயான அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு எல்லை தூண்கள் வைக்கப்பட்டிராததுடன், இந்த குகை தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டு ஆய்வு அறிக்கையும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பதில் பெற்றுக் கொடுக்கப்படவில்லை. | இந்த குகை அருகேயான அளவீட்டு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு எல்லை தூண்கள் வைக்கப்படவும், குறித்த ஆய்வு அறிக்கை வழங்கப்படவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | 1998 ஆம் ஆண்டில் அத்தனகல்ல ஓயாவில் கண்டெடுக்கப்பட்ட 1270 ஆண்டுகள் பழமையான 59 அடி 11 அங்குலம் நீளமான பழைமையான படகு தொல்பொருளியல் திணைக்களத்தினால் கொண்டுவரப்பட்டு, கொழும்பு தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் வளாகத்தில் நீர் தொட்டியொன்றில் வைக்கப்பட்டிருந்தது. இந்த படகு பாதூக்கும் பணிப்பொறுப்பு தொல்பொருளியல் திணைக்களத்திற்கு பணிக்கப்பட்டிருந்ததுடன், அதற்கு தேவைப்படுகின்ற பொலிஎதிலின் மற்றும் க்லைக்கோல் பெயருடைய இரசாயன பொருட்களும் ரூபா 04 மில்லியன் செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், 2001 ஆம் ஆண்டு வரையும் இவ் இரசாயன திரவியம் பயன்படுத்தப்பட்டு அப் படகு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராததுடன், அவ் இரசாயன பொருட்கள் வேறு இரு பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பின்னர் வேறு முறைமையொன்றினால் இந்த படகு பாதுகாக்கும் நடவடிக்கை நிறைவேற்றப்படுவதற்கு இரசாயன பாதுகாப்பு பிரிவு நடவடிக்கை எடுத்திருந்தது. எனினும் பாதுகாப்பு முறைமை மற்றும் பணி உரிய கால வரையறையினுள் உரிய முறையில் மேற்கொள்ளாமையினால் 2021 ஆம் ஆண்டு இறுதியில் படகின் மரப்பகுதி கடுமையாக பழுதடைந்து படகு முழுமையாக அழிந்திருந்தது. | பாதுகாப்பு முறைமை நிறைவடைந்தவுடன் உரிய நிலையின் கீழ் கண்காட்சிக்கு நடவடிக்கை எடுக்கப்படாமை மற்றும் இயற்கை சேதங்கள் ஏற்பட்டமையினால் 2019 ஆம் ஆண்டு இறுதியில் படகின் பல பாகங்கள் கடுமையாக பழுதடைந்திருந்தது. | திணைக்களத்தின் பிரதான பணிப்பொறுப்பு தொல்பொருளியல் இடங்கள், சொத்துக்கள் தொடர்பாக ஆய்வு, அகழ்வு மற்றும் பாதுகாப்பு மேற்கொள்ளுதல் ஆகும். அப் பிரதான பணிகளில் ஒன்றான பாதுகாப்பு பணியினை உரிய முறையில் நிறைவேற்றப்படாமையினால் இந்த தொல்பொருளியல் சொத்து அழிந்திருந்தது. எதிர்காலத்தில் இவாறான நிலை ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், அனைத்து தொல்பொருளியல் சொத்துக்களும் பாதுகாக்கப்படுவதற்கு மற்றும் பராமரிப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | ஆய்வுக்கூடத்தினுள் காணப்படுகின்ற இரசாயன பொருட்கள் பாதுகாப்பாக வைக்கப்படுவதற்கு தேவையான தட்டுகள் காணப்படாமையும், கைதவிர்ப்பு செய்யப்பட வேண்டிய இரசாயன பொருட்கள் பல்வேறு காரணங்களினால் கைதவிர்ப்பு செய்யப்பட்டிராமையினாலும் இவ் இரசாயன பொருட்கள் பாதுகாப்பற்று களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. மேலும், அந்த ஆய்வுக்கூடத்தினுள்ளேயே 1950 ஆம் ஆண்டு தொடக்கம் அகழ்வு மற்றும் பாதுகாப்பு பிரிவுகள் ஊடாக | 2022 இல் பட்டியல்படுத்தல் மற்றும் ஆவணப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பதிவு செய்தல் நிறைவு செய்யப்பட்ட தொல்பொருட்கள் குறித்த பொருத்தமான இடங்களுக்கு கையளிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | கைதவிர்ப்பு செய்ய வேண்டிய இரசாயன பொருட்கள் கைதவிர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிதுடன், பயன்பாட்டிற்கு எடுக்கப்படக் கூடிய இரசாயன பொருட்கள் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தி வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். பிரிவிடமுள்ள தொல்பொருட்கள் பாதுகாக்கப்படுவதற்கும், அத் தொல்பொருட்கள் |

| | | |
|---|---|---|
| கண்டுபிடிக்கப்பட்ட தொல்பொருட்கள் அதிகளவில் காணப்பட்டதுடன், சில தொல்பொருளியல் சொத்துக்கள் பாதுகாக்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. கடந்த காலத்திலிருந்து முறையாக தாயரிக்கப்பட்ட தொல்பொருட்கள் தொடர்பான பதிவேடொன்று காணப்படாததுடன் 2020, 2021 ஆம் ஆண்டுகளில் தொல்பொருட்கள் ஆவணப்படுத்தப்படுவதற்கு ஆரம்பிக்கப்பட்ட போதிலும், தற்போது தொல்பொருட்கள் அதிகளவில் ஆவணப்படுத்தாது பாதுகாப்பற்று காணப்பட்டது. | | அனைத்தும் முறையே ஆவணப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.2. எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கட்டிடக்கலை பாதுகாப்பு பிரிவின் ஊடாக கூட்டுத்தொகை ரூபா 54,145,000 செலவிடப்பட்டு 32 செயற்திட்டங்கள் நிறைவேற்றப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டினுள் கூட்டுத்தொகை ரூபா 24,154,948 செலவிடப்பட்டு 13 செயற்திட்டங்களின் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பல்வேறு காரணங்களினால் நிறைவு செய்ய முடியாத செயற்திட்டங்கள் 19 ஆக காணப்பட்டது. | நிதியேற்பாடு பெறப்படாமையின் காரணத்தினால் இறுதி காலாண்டுக்கு முன்மொழியப்பட்ட 18 செயற்திட்டங்களின் பணிகள் நிறைவேற்றுவதற்கு முடியாது போனது. | 32 செயற்திட்டங்களில் 13 மட்டும் நிறைவேற்றப்பட்டமையினால் 50 சதவீத செயன் முன்னேற்றமேனும் அடையப்பட்டிருக்கவில்லை. திட்டமிட்ட பிரகாரம் பணிபொறுப்பு நிறைவேற்றப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தல் பிரிவின் கீழ் 13 தொல்பொருளியல் இடங்கள் தொல்பொருளியல் காப்பாக பிரகடனப்படுத்தப்படுவதற்கு காணி பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. எனினும் அதில் மாமடுவ முல்லையிலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க மயானத்திற்கு மட்டும் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருந்தது. மேலும், பிரகடனப்படுத்தப்பட்டிருந்த 176 காப்பகங்களின் நிலஅளவை திட்டம் பெற்றுக் கொள்வதற்காக சர்வே பணிப்பாளர் நாயகத்திடம் விண்ணப்பித்த போதிலும் 56 இடங்களுக்கு மட்டும் நில அளவை திட்டங்கள் பெறப்பட்டிருந்தன. | குறித்த அவதானிப்பு சரியானதாகும். | ஆண்டினுள் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்ட பணிப்பொறுப்புக்கள் உயர் செயலாற்றல் மட்டத்தில் நிறைவு செய்துக் கொள்வதற்கு கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

## 3.3. சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் ஆய்வுக் கூடத்திற்கு வழங்கப்பட்டுள்ள மின் விநியோக குறைப்பாடுகள் மற்றும் உயர் அழுத்த நீர் வழங்கல் பெற்றுக் கொடுக்காமை காரணத்தினால் அப் பிரிவின் பொறுப்பில் உள்ள வெற்றிட அடுப்பு, ஈரப்பதன் மூட்டும் அறை, நீர் சுத்திகரிப்பு முறைமை மற்றும் கண் கழுவும் முறைமை குறித்த பாதுகாப்பு பணிகளுக்காக பயன்படுத்துவதற்கு முடியாது விறைவற்றதாக ஆய்வுக்கூடத்தினுள் காணப்பட்டது. | ஆய்வுக் கூடத்தின் நடவடிக்கைகள் புதிய நிர்மாணிப்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், புதிய நிர்மாணிப்பு நிறுத்தப்பட்டுள்ளமையினால் புனரமைப்பு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளது. | மின் விநியோக குறைப்பாடுகள் மற்றும் நீர் விநியோக குறைப்பாடுகள் பராமரிப்பு பிரிவின் ஊடாக நிவிர்த்தி செய்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிதுடன், அதனூடாக விளைவற்ற சொத்துக்கள் பயறுதிமிக்க பணிகளில் ஈடுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) பல்வேறு தொல்பொருளியல் அகழ்வுகளின் போது கண்டெடுக்கப்பட்ட நகரக்கூடிய தொல்பொருட்களான ஏராளமான பழங்கால நாணயங்கள் நீண்ட காலம் தொடக்கம் கல்வெட்டு மற்றும் நாணயவியல் பிரிவு, ஆய்வுகப் பிரிவு மற்றும் மண்டல அலுவலகங்களில் முறையாக ஆவணப்படுத்தாது காணப்பட்டது. 2020 கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை பிரகாரம் இந்த நாணயங்கள் ஆவணப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டடிருந்த போதிலும், 2022 ஏப்ரல் வரையிலும் அப் பணி நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | குறித்த அவதானிப்பு சரியானதாகும். | நகரக்கூடிய தொல்பொருட்கள் விரைவாக ஆவணப்படுத்துவதற்கும், அவை பாதுகாக்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.4. நட்டங்கள் மற்றும் சேதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அத்தனகல்ல ஓயாவிலிருந்து கண்டெடுக்கப்பட்டு கொழும்பு தேசிய நூதனசாலை வளாகத்தில் வைக்கப்பட்டிருந்த அத்தனகல்ல படகின் உரித்து மற்றும் பாதுகாப்பு பணி தொல்பொருளியல் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. உரிய காலப்பகுதியினுள் முறையான பாதுகாப்பு முறைமையொன்றின் பிரகாரம் இந்த படகு பாதுகாக்கப்படாமையினால் அது மிக சிறிய மர பகுதிகள் வரை அழிந்திருந்தது. அழிவிற்கு பாத்திரமாகியிருந்த அந்த மரப்பகுதிகள் வைப்பதற்கு துணையொன்று தயாரிப்பதற்காக | மேற்படி படகின் வரலாற்றுமிக்க மற்றும் தொல்பொருளியல் முக்கியத்துவம் அடிப்படையில் பாதுகாப்பு எல்லை மிகைத்து செல்லப்படினும் கைதவிர்ப்பு செய்ய முடியாது. அது மறுசீரமைக்கப்பட்ட பின்னர் மீண்டும் | நாட்டினுள் காணப்படுகின்ற நிதி நெருக்கடி போன்ற நிலை தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு பயனற்ற செலவுகள் குறைத்துக் கொள்வதற்கும் நட்டங்கள் மற்றும் சேதங்கள் குறையும் வகையில் |

| | | |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டினுள் கூட்டுத்தொகை ரூபா 1,770,876 செலவிடப்பட்டிருந்ததுடன், தற்போது பழுதடைந்திருந்த அந்த மரப் பகுதிகளின் பாதுகாப்பு எல்லை மிகைத்திருந்தமையினால் அதன் உள்ளவாரான அளவில் நகலொன்று தயாரிப்பதற்காக மீண்டும் தொல்பொருளியல் திணைக்களத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அடையாளப்படுத்த முடியாத நிலையில் கடுமையாக அழிந்திருந்த இந்த படகின் மரப்பகுதிகள் வைப்பதற்கு தயாரிக்கப்பட்ட இருப்பு துணை விளைவற்ற செலவொன்றாக அவதானிக்கப்பட்டது. | காட்சிப்படுத்தப்படவுள்ளது. | செயற்படுவதற்கும் முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.5 முகாமைத்துவ நலிவுகள்

---------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| -------------------------- | ------------------------- | ---------------------- |
| (அ) யான் ஓயா நீர்தேக்க செயற்திட்டத்தின் ஊடாக அந் நீர் தேக்கத்திற்கு உட்படும் நிலத்தினுள் தொல்பொருள், அகழ்வு செய்யப்பட்டு அகற்றப்பட்டிருந்ததுடன், குறித்த அகழ்வுப் பணிகள் நிறைவேற்றப்படுவதற்கு ரூபா 10,000,000 ஆன தொகை 2019 சனவரி 19 ஆம் திகதி நீர்பாசண திணைக்களத்தினால் தொல்பொருளியல் திணைக்களத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக தயாரிக்கப்பட்ட மீளாய்வு அறிக்கையின் பிரகாரம் அத் தொல்பொருள் பாதுகாப்பாக வைப்பதற்காக நூதனசாலையொன்று நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டு அதற்கான அடிப்படை திட்டம் மற்றும் மதிப்பீடு சமர்ப்பிக்குமாறு தொல்பொருளியல் திணைக்களத்திடம் மெற்கொண்ட அறிவித்தலின் பிரகாரம் நாதனசாலை கட்டிமொன்று நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டு நீர்பாசண திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும் 2022 ஆம் ஆண்டு வரையிலும் அந் நூதனசாலைக்காக கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிராததுடன், இந்த நூதனசாலை நிர்மாணித்தல் தொடர்பாக திணைக்களத்தினால் கவனம் செலுத்தப்படாமை காரணத்தினால் அத் தொல்பொருட்கள் பாதுகாப்பற்று இன்னுமாக அநுராதபுர பகுப்பாய்வு கிளையில் மற்றும் பதவிய தொல்பொருளியல் மண்டல அலுவலகத்தினுள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. | யான் ஓயா நூதனசாலையின் கட்டிடக்கலை திட்டம் திருத்தப்பட்டு நீர்பாசண திணைக்களத்தின் செயற்திட்ட பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த நூதனசாலை நிர்மாணிக்கப்பட்ட பின்னர் தொல்பொருட்கள் காட்சிப்படுத்தப்படும். | இந்த தொல் பொருட்கள் பாதுகாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், அதற்காக தேவையான நூதனசாலை நிர்மாணிப்பதற்கு குறித்த செயற்திட்டத்தின் உதவி பெற்றுக் கொள்ளல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) தொல்பொருளியல் திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்காக சட்ட பிரிவொன்று தாபிக்கப்பட்டிருந்தது. அதில் கடமையாற்றும் சட்ட உத்தியோகத்தர்கள் 2021 ஆம் ஆண்டினுள் நாடு முழுவதுமாகவுள்ள பல்வேறு நீதிமன்றங்களில் பரீட்சிக்கப்படுகின்ற வழக்குகளுக்காக திணைக்களத்தின் சார்பில் பிரநிதிப்படுத்தி பங்குப்பற்றியிருந்தனர். எனினும், நீதிமன்றங்களில் பரீட்சிக்கப்படுகின்ற பல்வேறு வழக்குகளுக்காக திணைக்களத்தினை பிரநிதித்துவப்படுத்துவதற்கு இந்த சட்ட உத்தியோகத்தர்கள் பங்குப்பெற்றிருந்த போதிலும், 2021 ஆம் ஆண்டின் யூன், யூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களின் போது அவ்வாறு நீதிமன்ற வழக்குகளுக்காக பங்குப்பெறுவதற்கு முன்னர் முன்அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சட்ட பிரிவின் மாதாந்த நிகழ்ச்சித் திட்டங்கள் யூன், யூலை, ஆகஸ்ட் மாதங்களில் அங்கீகரித்துக் கொள்வதற்கு முடியாது போயிருந்தது. | சட்ட பிரிவின் நடவடிக்கைகள் முறைமைப்படுத்த வேண்டியுள்ளதென அவதானிக்கப்பட்டதுடன், திணைக்களத்தினை பிரநிதித்துவப்படுத்தி நீதிமன்றங்களுக்கு செல்லுதல் மிகவும் முறையாக மற்றும் முன் எழுத்துமூல அனுமதியின் அடிப்படையில் மட்டும் மேற்கொள்ளல் வேண்டும். |
| (இ) திணைக்களத்தின் ஆய்வுக்கூட கட்டிடத்தின் கூரை, சுவர், உட்கூரை, சாந்து, மின் விநியோக முறைமை உடைந்து கடுமையாக சேதமடைந்திருந்தன. அதன் உள்ளே காணப்படுகின்ற உபகரணங்கள் மற்றும் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படக்கூடிய நிலையில் கட்டிடம் காணப்படினும், அக் கட்டிடம் அலுவலகம் நடத்திச் செல்லக்கூடிய நிலைக்கு பழுதுபார்ப்பதற்கு அல்லது அவ் இடத்திலிருந்து அலுவலகத்தினை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பு சரியானதாகும். | பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள பதில் பிரகாரம் இந்த கட்டிடத்திற்காக பொருத்தமான நடவடிக்கையொன்று எடுத்தல் வேண்டும். |
| (ஈ) ஓய்வுப் பெற்ற உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் அரச சேவையில் ஈடுப்படுத்துவதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், தொல்பொருளியல் திணைக்களத்தின் ஓய்வுப் பெற்ற 09 உத்தியோகத்தர்கள் அவ்வாறு அராசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் முன் அனுமதியின்றி ஓய்வுப் பெற்று சென்ற பின்னர் ஒப்பந்த அடிப்படையில் இணைக்கப்பட்டிருந்ததுடன், அவ் உத்தியோகத்தர்களில் 02 உத்தியோகத்தர்களுக்காக மட்டும் 2021 ஒக்தோபர் 15 ஆம் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்ககுழுவினால் கடமையில் ஈடுப்படுத்துவதற்கு அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. | அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறும் வரையில் அமைச்சின் செயலாளரின் முன் அங்கீகாரம் பெற்றுக் கொடுத்தமையினால் கடமையில் ஈடுப்படுத்தப்பட்டது. | ஓய்வுப்பெற்ற உத்திளோகத்தர்கள் கடமையில் ஈடுப்படுத்துவதற்கு முன்னர் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டியதுடன், காணப்படுகின்ற சட்டதிட்டங்கள் மற்றும் சுற்றறிக்கைளுக்கு அமைவாக மட்டும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

---------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 திசெம்பர் 31 இல் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 4373 உம், உள்ளவாரான பதவியணி 1858 உம் ஆகியமையினால் வெற்றிடங்கள் எண்ணிக்கை 2515 ஆக காணப்பட்டது. இந்த வெற்றிடங்களில், நிறைவேற்று மட்டத்தின் வெற்றிடங்கள் 39 காணப்பட்டதுடன், மூன்றாம் மட்டத்தின் வெற்றிடங்கள் 34 காணப்பட்டது. இந்த வெற்றிடங்களுக்காக பதிற்கடமை மற்றும் கடமை மேவுகை அடிப்படையில் ஊழியர்கள் கடமையில் இணைக்கப்பட்டிருந்ததுடன், இந்த பதவிகளுக்காக நிரந்தரமாக ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்கு வெவ்வேறு தடைகள் உருவாகியிருந்தது. அதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட மொத்த பதவியணியின் 58 சதவீத வெற்றிடங்கள் காணப்படுகின்றமையினால் எதிர்பார்க்கப்பட்ட பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றுவதில் பல்வேறு தடைகள் உருவாகியிருந்தது. | வெவ்வேறு மட்டங்களில் காணப்படுகின்ற வெற்றிடங்கள் நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் அமுலிலுள்ள சட்ட திட்டங்கள் பிரகாரம் இந்த ஊழியர் வெற்றிடங்கள் தேவையின் அடிப்படையில் விரைவாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |